7th November 1966]

V.—PRESENTATION OF REPORT.

REPORT OF THE COMMITTEE ON ESTIMATES ON INFORMATION AND PUBLICITY DEPARTMENT.

SRI P. RAMACHANDRAN : Mr. Speaker, Sir, I rise to present the report of the Committee on Estimates (1966–67) on the Information and Publicity Department.

VI.—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1966-67—GENERAL DISCUSSION.

MR. SPEAKER : Now, we will take up the Second Supplementary Statement of Expenditure for general discussion.

திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, நமது முதல் அமைச்சர் அவர்கள் புயலினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு போய்விட்டு, சபையின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு ரயில் மூலம் திரும்பி வருவதற்கு முடியாமல் தடை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எந்த இடத்தில் எப்படி தடை ஏற்பட்டிருக்கிறது, புயலினால் ஏதாவது பாதிக்கப் பட்டிருக்கிறதா ?

கனம் சபாநாயகர் : புயல் ஒன்றுமில்லை. ரயில் காலதாமதமாகி வருகிறது. By now, he would have come.

திரு. கே. ஏ. மதியழகன் : 'சப்ளிமெண்டரி ஸ்டேட்மெண்டு ஆப் எக்ஸ்பெண்டிசர்' விவாதத்தில் கலந்து கொள்வதற்கு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் வந்துவிடுவார்களா ? ரயில் எப்பொழுது வந்து சேரும் என்று ஏதாவது தொலைபேசியிலோ அல்லது வைர்லஸிலோ தகவல் கேட்கப்பட்டதா ? அதைப்பற்றி அரசாங்கத் தரப்பில் ஏதாவது விவரம் சொல்ல முடியுமா ?

MR. SPEAKER : Is it the anxiety of the hon. Member, about the Hon. Chief Minister or about the Supplementary Statement of Expenditure ?

திரு. சா. கணேசன் : இந்தச் சபையினுடைய முதல்வர், இப்போது எங்கே இருக்கிறார்கள், எவ்வளவு நேரத்தில் வருவார்கள் என்று தெரிந்துகொள்ள விரும்புவது நியாயமாகும்.

கனம் சபாநாயகர் : நியாயம்தான். அப்படியானால் முதலிலேயே இதைப்பற்றிக் கேட்டிருக்கலாமே? முதல் அமைச்சர் அவர்களுடைய கேள்விகளைக் கூட 'அட்ஜர்ன்' பண்ணுகிறேன் என்று முதலிலேயே சொன்னேன்.

How long does the House want to discuss this matter?

THE HON. SRI R. VENKATARAMAN : We will fix the time for discussion as two hours.

MR. SPEAKER : Can we finish it within two hours?

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, மற்றைய பல மசோதாக்கள் இருக்கின்றன. அவைகளை முதலில் எடுத்துக்கொண்டு முடித்துவிட்டால், அதற்குப் பிறகு துணை